# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:135 **தேதி**:-25.10.2016

## சென்னையில் நடைபெற்ற தமிழ் மாநில செயற்குழுக் கூட்டம்

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில செயற்குழு கூட்டம், அக்டோபர் 20 அன்று சென்னை வி.கே.எம். திருமண மண்டபத்தில், அகில இந்திய உதவிப் பொதுச் செயலாளரும், நமது மாநில தலைவருமான தோழர். எஸ். செல்லப்பா தலைமையில் நடைபெற்றது. மாநில உதவிச் செயலர் தோழர். சுப்ரமணியன் அனைவரையும் வரவேற்றார். பின்னர், நிர்வாகத்தின் நியாயமற்ற அறிவிப்பை முறியடித்து, போராட்டங்கள் மூலமும், கடுமையாக வாதாடியும், கூட்டாக உறுதியான நிர்ப்பந்தம் கொடுத்தும், ஆறாண்டுகளுக்குப் பிறகு, 2014-15-ஆம் ஆண்டிற்கான PLI ரூ. 3000 வழங்குவதற்கான உத்தரவை நமது மத்திய சங்கம் பெற்றுத் தந்துள்ளதை மாநிலச் செயற்குழு கூட்டம் பாராட்டியது. நமது மகிழ்வைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் இனிப்பும் விநியோகிக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து, நமது அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர். பி. அபிமன்யு தனது சிறப்புரையில், ஏழாவது சங்க அங்கீகார தேர்தலுக்குப் பிறகு மத்திய சங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள், குறிப்பாக ஓய்வூதியர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு, ஓய்வூதியம் வழங்கும் முழுப் பொறுப்பு அரசாங்கத்திற்கானது, PLI ஆகிய உத்தரவுகள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் பிரச்னைகளில் கார்ப்பரேட் அலுவலகத்தின் இரண்டு உத்தரவுகள், ஊழியர் சம்பள மாற்றத்திற்கு அடிப்படையான அம்சமாகிய BSNL நிறுவனத்தின் வருமானத்தைப் பெருக்குதல், கூட்டு பேர சக்தியை வலுப்படுத்துதல் ஆகிய அம்சங்களை அழுத்தமாக எடுத்துரைத்தார். மேலும், தென்னாப்ரிக்கா நாட்டின் டர்பன் நகரில், நான்கு நாட்கள் நடைபெற்ற WFTU மாநாட்டின் அனுபவங்களையும், நிதி மூலதனம் தனது சுரண்டல் கரங்களை உலக அளவில் விரித்துள்ள சூழ்நிலையில் உலக தொழிலாளி வர்க்கம் ஜாதி, மத, இன, மொழி பேதங்களைக் களைவதோடு, நாடுகளைக் கடந்த ஒன்றுபட்ட போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலையில், இம்மாநாடு நடைபெற்ற முக்கியத்துவத்தை எடுத்துரைத்ததோடு, தன்னுடைய முன்னோர்கள் எந்த மண்ணிலிருந்து சங்கிலிகளால் பிணைக்கப் பட்டு அடிமைகளாகக் கொண்டு செல்லப் பட்டார்களோ, அந்த மண்ணுக்கு முதலாளித்துவத்தை எதிர்த்த போராளிகளின் பிரதிநிதியாகத் திரும்பி வந்துள்ளதை டிரினிடாட் நாட்டின் பிரதிநிதி, மாநாட்டில் விவரித்ததையும், ஓர் அடிமைத் தொழிலாளி போராட்டத்திற்குச் செல்லும்போது தான் திரும்பி வருவது நிச்சயமல்ல என்று தன் அன்னையிடம் தெரிவிக்கும் உருக்கமான பாடலை ஆப்ரிக்க பிரதிநிதிகள் அப்போது பாடியதையும் நெகிழ்ச்சியோடு விவரித்தார். அத்தகைய முன்னோடி போராளிகளின் திசைவழியில் லட்சிய பதாகைகளை உயர்த்திப் பிடிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

பின்னர், ஆய்படு பொருட்கள் மீதான புள்ளி விவரங்களோடு கூடிய விவாதக் குறிப்பை மாநிலச் செயலாளர் தோழர். பாபுராதாகிருஷ்ணன் முன்வைக்க, செப்டம்பர் 2 பொதுவேலைநிறுத்தம், அகில இந்திய மாநாட்டு நிதி, சேவை விரிவாக்கம், சென்னை சொஸைட்டி குறித்த கையெழுத்து இயக்கம், ஒப்பந்தத் தொழிலாளர் பிரச்னைகள், இயக்கங்கள் குறித்து விரிவான விவாதத்தில் அனைத்து மாவட்டச் செயலாளர்களும் பங்கேற்றனர். மாவட்டங்கள் சார்பாக மாநாட்டு நிதி ரூ 8,20,000 வழங்கப் பட்டது. பொதுத்துறை பாதுகாப்பு சிறப்பு மலரை மாநாட்டில் வெளியிட தீர்மானிக்கப் பட்டு, மாவட்ட வாரியான ஒதுக்கீடு செய்யப் பட்டது. பின்வரும் முடிவுகள் எடுக்கப் பட்டன :

1. அகில இந்திய மாநாட்டு நிதியை முழுமையாகப் பூர்த்தி செய்த விருதுநகர், நாகர்கோவில் மாவட்ட சங்கங்களுக்குப் பாராட்டு தெரிவிக்கப் பட்டது.
2. அனைத்து மாவட்டங்களும் மாநாட்டு நிதியை முழுமையாக நவம்பர் 15- ஆம் தேதிக்குள் பூர்த்தி செய்ய வேண்டும்.
3. சொஸைட்டி கையெழுத்து இயக்கம் நடத்தி நவம்பர் 10- ஆம் தேதி ஒப்படைக்க வேண்டும்.
4. மாநில அலுவலகத்தில் 10 ஒப்பந்தத் தொழிலாளர்களை பணிக்கு எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, அக்டோபர் 25 அன்று, மாவட்டங்களில் மாலை நேர தர்ணா போராட்டமும், நவம்பர் 10 அன்று, மாநில அலுவலகம் முன்பு, பெருந்திரள் முறையீடும் நடைபெறும். இப்போராட்டத்தின் முக்கியத்துவம் உணர்ந்து சென்னைக்கு ஊழியர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் சமமான எண்ணிக்கையில் தமிழகம் முழுவதிலிருமிருந்து ஏறத்தாழ 2500 பேர் கொஞ்சமும் குறைவின்றி திரட்டி வரப்பட வேண்டும்.
5. தலமட்ட கவுன்சில் உறுப்பினர் பட்டியல் விரைவில் இறுதி செய்யப் பட வேண்டும்.

மாநில செயற்குழுவின் முடிவுகளை நாம் அனைவரும் நிறைவேற்றுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)
**மாநில செயலாளர்**